மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு ஜுன் திங்கள் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண். 02/2024
இன்
அசல் வழக்கு எண்.105/2023
-------

1. கருப்பசாமி
2. பொன்னுத்தாய் .. மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர் /

இருக்கண்குடி ஊராட்சிமன்றம்
அதன் தலைவர் மூலம் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 02.06.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எம். சங்கர்ராம், பி.எஸ்ஸி. பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

<u>உத்தரவு</u>

இந்த மனுவை ஏற்று தபசில் சொத்தை பார்வையிட்டு அளந்து அளவுகள் குறித்தும், அத்துமால்கள் குறித்தும், தபசில் சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்தும், தபசில் சொத்தின் தன்மை மற்றும் அமைப்பு குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டி கட்டளை 26 விதி 9 பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>**மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்**</u>–

**2.1.** மனுவில் 1 ம் மனுதாரர். அசல் வழக்கில் 1 ம் வாதி. இந்த அபிடவிட்டை

மனுதாரருக்காகவும், 2ம் மனுதாரர்/2ம் வாதிக்காகவும் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு தபசில் சொத்தை மனுதாரரும், 2ம் மனுதாரரும் 09.12.1988ம் தேதிய கிரையப் பத்திரத்தின் மூலம் கருப்பையா மற்றும் மாரியப்பன் வகையறாவிடமிருந்து தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில் கிரையம்பெற்று விவசாயம் செய்து அனுபவம் செய்து வந்துள்ளனர். இந்நிலையில் மனுதாரர்களுக்கு வயதாகிவிட்ட காரணத்தாலும், விவசாயத்திற்கான நீர்வரத்து இல்லாத காரணத்தாலும் தபசில் சொத்தில் விவசாயம் செய்ய இயலவில்லை. அதனால் குடும்பத்துடன் சாத்தூருக்கு குடிபெயர்ந்துவிட்டோம். எனவே தபசில் சொத்து தரிசாக இருந்து வருகிறது.

**2.2**. இந்நிலையில் மனுதாரர்கள் ஊரில் இல்லாத காரணத்தை பயன்படுத்தி எதிர்மனுதாரர் வகையாட்கள் தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து ரோடு போடும் வேலையை 18.11.2023ம் தேதி ஆரம்பித்தனர். அதனை தெரிந்த கொண்ட மனுதாரர்கள் உடனடியாக தபசில் சொத்திற்கு சென்று ஆட்சேபணையை தெரிவித்தோம். அதனை பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஆக்கிரமிப்பு வேலைகளை செய்து வந்தனர். அசல் வழக்கில் இ.ம.எண்.01/2023 என்ற மனுவை தாக்கல் செய்து இடைக்கால தடையுத்தரவு கேட்டிருந்தாம். ஷை அசல் வழக்கு மற்றும் இடைநிலை மனுவில் அறிவிப்பு சார்பு செய்த பின்னரும், எதிர்மனுதாரர் வகையறாக்கள் தொடர்ந்து ரோடுபோடும் வேலையை செய்து முடித்துவிட்டனர்.

**2.3.** எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட வழக்கு தபசில் சொத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்பை நீதிமன்றத்தின் பார்வைக்கு கொண்டு வர வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு, அளந்து, அத்துமால்கள் குறித்தும், அமைப்பு, தன்மை குறித்தும், அறிக்கை தாக்கல் செய்தால் எதிர்மனுதாரர்கள் எந்த அளவிற்கு வழக்குச் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்ற விபரத்தை துல்லியமாக அறிய முடியும். இந்த

மனு மீது எதிர்மனுதாரருக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணைகளும் இருக்கப் போவதில்லை. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே மனு தாக்கல்.

3. **<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையின் சுருக்கம் –</u>**

**3.1.** தாவா மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தினை எந்த காலத்திலும் ஆக்கிரமிப்பு செய்ததும் கிடையாது. மனு தபசில் சொத்தானது அரசு ஆவணங்களில் உள்ளபடிக்கும், ஏற்கனவே தாவா மனுதாரர்களுக்கு உரிய முறையில் அறிவிப்பு கொடுத்தும், மனு சொத்தினை அளவீடு செய்து மனுதாரர்களுக்குரிய சொத்தினை நீக்கம் செய்தது போக மீதமுள்ள அரசு நிலத்திலேயே தார் சாலை அமைக்கப்பட்டது. மேற்படி தார்சாலை அமைப்பதனால் இந்த மனுதாரர்களுக்கு எந்த பாதகமும் ஏற்படப் போவதில்லை. தாவா மனுதாரரை தவிர வேறு யாரும் இடையூறு செய்ததாக எந்த தாவாவும் தொடுக்கவில்லை. மேலும் அரசு விதிமுறைகளின்படிக்கு உரிய காலத்திற்குள்ளாக டெண்டர் முடிக்கப்பட வேண்டுமென்ற விதியின் கீழ் தார் சாலையானது அமைக்கப்பட்டுள்ளது. அதனால் மனுதாரர் அசல் வழக்கினை காலம் கடத்தவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனுவானது எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப் படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்

கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு சொல்லும் காரணம் என்னவென்றால் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்பு குறித்தும் அளந்து அத்துமால்கள் குறித்தும் பார்வையிட்டு அதன் அமைப்பு, தன்மை குறித்தும் தாக்கல் செய்தால் சொத்தில் எதிர்மனுதாரர் எந்த அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்ற விபரத்தை துல்லியமாக அறிய முடியும். இந்த மனு மீது எதிர்மனுதாரருக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணைகளும் இருக்கப்போவதில்லை. எனவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், அரசு நிலத்திலேயே தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்களுக்கு எந்த பாதிப்பும் பாதகமும் ஏற்படப்போவதில்லை என்றும், தாவா மனுதாரரை தவிர வேறு யாரும் இடையூறு செய்ததாக எந்த தரப்பினரும் கூறவில்லை என்றும், அசல் வழக்கை காலம் கடத்துவதற்காக தாக்கல் செய்துள்ள மனுதாரர்களின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறும் வேண்டப்பட்டுள்ளது. இருப்பினும், தபசில் சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிலையில், தபசில் சொத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமானது அவசியமானது என நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர்கள் மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என தீாவு காணப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் **திரு.K. விக்னேஷ், M.S.No.3712/2021** என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் இருதரப்பிற்கும் முன்னறிவிப்பு கொடுத்து மனுச் சொத்தை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் பார்வையிட்டு தபசில்

சொத்தின் அத்துமால்கள், ஆக்கிரமிப்புகள், அதன் தன்மை மற்றும் அமைப்பு குறித்து அளந்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையருக்கான கட்டணம் ரூ.6000/-ம் என நிர்ணயம் செய்யப்பட்டு, மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும், மனுச் சொத்தைப் பார்வையிடச் செல்லும் சமயத்தில் பகுதி தொகையாக ரூ.3000/-யை நீதிமன்ற ஆணையர் வசம் மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும், அறிக்கை தாக்கல் செய்யும் சமயத்தில் மீதித் தொகையான ரூ.3000/-யை நீதிமன்ற ஆணையரிடம் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய 30.07.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண். 02/2024
இன்
அ.வ.எண்.105/2023
**உத்தரவு**
நாள் - 27.06.2025.